மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

RLTOP No. 05/2023 நாள்– 10.06.2024

மனுதாரரின் 1வது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.A.C.பிரகாஷ், இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்– பிரபுராஜன் (ம.சா.1) தந்தையின் பெயர்–

விலாசம்– தாலுகா–

வயது– தொழில்

நான் இந்த மனுவின் 3வது மனுதாரர் ஆவேன். எனது முதல் விசாரணையை சாட்சியமான எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் யாவும் உண்மையானவை. மேலும், அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவைதான். நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னுடைய முதல் விசாரணையை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். எனது தரப்பு ஆவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

1) 06.06.2018ம் தேதியிட்ட அ.வ.எண்.26/2013ன் தீர்ப்புரை நகல் சான்றிட்ட நகல் – ம.சா.ஆ.1

2) 03.11.2022ம் தேதியிட்ட மேல்முறையீடு வழக்கு எண்.10/2020 தீர்ப்புரை சான்றிட்ட நகல் – ம.சா.ஆ.2

3) 19.05.2023ம் தேதியிட்ட மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் அறிவிப்பு உண்மை நகல் – ம.சா.ஆ.3

4) 22.05.2023ம் தேதியிட்ட பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் – ம.சா.ஆ.4

5) 24.05.2023ம் தேதியிட்ட பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் – ம.சா.ஆ.5

6) 30.12.2002 ம் தேதியிட்ட ஜான்சி என்பவர் எழுதிய உயில் ஆவணம் சான்றிட்ட நகல் – ம.சா.ஆ.6

7) 13.03.2006 ம் தேதியிட்ட ஜான்சி இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் – ம.சா.ஆ.7

8) 08.02.2007 ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் – ம.சா.ஆ.8

9) 28.03.2006 ம் தேதியிட்ட ஜான்சி வாரிசு சான்றிதழ் சான்றிட்ட நகல் – ம.சா.ஆ.9

மனுவில் கோரியபடி உத்தரவாக வேண்டுகிறேன்.

(எதிர்மனுதாரர் வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி கு.வி ஒத்திவைக்கப்படுகிறது)